[1975 மார்ச் 15

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, (அ) அண்டு (இ) 1973–74-ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 ஹெக்டேர் பரப்பளவில் வளர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதைப் பயிரிடுவதற்கு இன்னும் அதிக விஸ்தீரணம் உள்ள இடம் இருக்கிறது. பேப்பர் விலை இப்பொழுது அதிகமாக இருக்கிறது. பேப்பர் இன்டஸ்ட்ரிசுக்கு வழி வகுக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே, ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக இந்தப் பயிரை அதிகமாகப் பயிரிடுவதற்கு வழிவகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே படிப்படியாக இத்திட்டத்தின்கீழ் பேச்சிப்பாறை, பெருஞ்சாணிக்கரைகளிலும் ரப்பர் தோட்டங்களின் கீழும் அதிக அளவில் வைக்க செயற்குறிப்பு உள்ளது.

Board for administration of temples.

*337 Q.—Thirumathi T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether the Coimbatore District Conference of Hindu Temples Protection Committee held at the end of January 1974 requested the Government to constitute an autonomous Board for Hindu Temples, and

(*b*) if so, the action taken by the Government thereon?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) இக்கருத்து அரசால் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

புதியம்புத்தூர் கோவில்.

*338 வினா—திரு. பெ.சௌந்தரபாண்டியன்
திரு. எம். முத்தையா } மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆகஸ்ட் மாதத்தில் தூத்துக்குடி அருகிலுள்ள புதியம் புத்தூர் கோவிலில் உள்ள சிலை திருட்டுப்போய்விட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

1975 மார்ச் 15]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, (அ) 1974, ஆகஸ்ட் மாதத்தில் தூத்துக்குடி அருகிலுள்ள புதியம்புத்தூர் கோவிலில் உள்ள சிலை திருட்டுப் போய்விட்டது.

(இ) பீடத்துடன் கூடிய குலசேகரநாதர், குலசேகரவள்ளி மற்றும் சுப்ரமணியர் ஆகிய மூன்று பஞ்சலோக உற்சவ விக்கிரகங்களும், ஒரு தாமிர திருவாச்சியும் திருட்டுப் போயிற்று. இப்போது இவை காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளன. வழக்கும் நிலுவையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இது எவ்வாறு களவாடப்பட்டது ? தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். எந்த முறையிலே களவாடப்பட்டது ? அந்தக் கோயிலில் தகுந்த பாதுகாப்பு இல்லாததால் தான் இந்தத் திருட்டு நடந்தது என்று சொல்லப்படுவது உண்மையா ? அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, களவாடப் பட்டதற்கான காரணங்கள் தெரியவில்லை. ஆனால் அது பட்டியலில் சேராத ஒரு ஆலயமாகும். அந்தச் சிலைகள் திருட்டுப் போனவுடன் அடுத்த நாளே கண்டு பிடிக்கப்பட்டு, காவல் துறையினிடத்தில் புகார் செய்யப்பட்டு, உடனடியாகச் சிலைகள் மீட்கப்பட்டு விட்டன.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, எவ்வாறு களவாடப்பட்டது என்பது திருட்டுப் பயலுக்குத்தான் தெரியுமே தவிர அமைச்சருக்கு எப்படித் தெரியும் ?

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தச் சிலைகள் களவாடப்பட்டு பல சிலைகளெல்லாம் வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று சொல்லுகிறீர்களே. அப்படி வெளிநாட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்ட மிக முக்கியமான இரண்டு சிலைகள் இன்றைக்கு அமெரிக்காவிலிருந்து வர முடியாமல் இருக்கிறதே. ஆகவே, அவைகள் வருவதற்கான நிலைமை கள் என்ன இருக்கின்றன. இந்தச் சிலைகள் வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படாத அளவிற்கு அதைத் தடுப்பதற்கு போலீசாரால் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா? அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கனவே தமிழ்நாட்டிலேயிருந்து வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்ட சில சிலைகளை மீண்டும் இங்கே மீட்டுக்கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் அதிலே மிகவும் ஆர்வமாகச் செயல்பட்டு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதற் கிணங்க இப்பொழுது நியூயார்க்கில் இருக்கும் சிலையை மீண்டும் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று, வெளிநாடுகளில் உள்ள மூன்று நீதிமன்றங்களில் இது சம்பந்தமாக வழக்குகள் இருப்பதாக

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது மத்திய அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மேலும் இதுபோன்று சிலை திருடுபவர்களைத் தடுக்க வேண்டுமென்று, எல்லாக் கோயில்களிலேயும் பாதுகாப்புகளைப் பலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். நிதி வசதி உள்ள கோவில்களில் காவலர்களை நியமிக்கிறோம். நிதி வசதியில்லாமலும், கட்டடம் பாதுகாப்பு இல்லாமலும் இருக்கும் கோயில்களைப் பொறுத்தவரையில், பக்கத்திலுள்ள வசதியான கோயில்கள் அல்லது பாதுகாப்பாக இருக்கும் கோயில்களுக்கு அந்தச் சிலைகளை உள்ளூர் கிராமத்தாரின் ஒப்புதலோடு எடுத்துச் சென்று பாதுகாக்கிறோம். இப்படிப் பல்வேறு வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளை இங்கே செய்கிறோம். அதோடு, இந்தச் சிலைத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக அல்லது தடுப்பதற்காக போலீஸ் துறையிலேயும் தனிப் பிரிவை ஏற்படுத்தி அவர்களும் இதைக் கண்காணித்துப் பாதுகாத்து வருகிறார்கள்.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவரவர்களே, இதில் எத்தனை பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் திருட்டு சம்பந்தமாக, புதியம்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சண்முகத்தய்யா, செல்லத்துரை, செல்லையா ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டார்கள். வழக்குத் தொடரப்பட்டு, வழக்குத் நிலுவையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த வெளிநாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்காவுக்குச் சென்ற சிலை, அதில் பிரதானமாக இருக்கும் சாமான்களெல்லாம் அங்கேயிருந்து பிரேசில் நகரத்திற்குத்தான் எடுத்துச் செல்லச் சட்டமிருப்பதாகச் சட்டச் சிக்கல் வந்திருக்கிறதே. இப்படிப்பட்ட சட்டச் சிக்கல் தமிழ்நாட்டிலேயிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சிலை சம்பந்தமாக சர்வதேச ரீதியிலே ஏற்படக்கூடிய காரணமாக இருப்பதால் இந்தக் குறிப்பிட்ட சிலைகள் தமிழ்நாட்டை விட்டுச்செல்லாமல் இருந்திருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஏற்கனவே கடத்தப்பட்ட சிலைகள், அதிலே உள்ள சட்டச் சிக்கல்களை விவாதித்து மீண்டும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று எண்ணித்தான் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்து நடத்துகிறோம். ஆனால் இந்தச் சிலைகளைப் பொறுத்த வரையில் திருட்டுப்போனவுடனே காவல்துறையில் புகார்செய்யப்பட்டு, உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் மீட்கப் பட்டு, இப்பொழுது நீதிமன்றத்தில் பொறுப்பிலே அந்தச் சிலைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.